பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 09 திங்கட்கிழமை 25.07.2022 கதிர் 151

## மின்சாரம் தாக்கி சிறுவன் மரணம்!

உறவினர் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த 11 வயது சிறுவன் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

வெல்லவாயா, கொட்டவெஹெரகல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மல்வத்தவல வித்தியாலயத்தில் ☞2



## புதன்கிழமை சபை அதிரும்

### 'கோல்பேஸ்' தாக்குதல் விவகாரம் சூடுபிடிக்கும்

கொழும்பு – காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள், கூட்டு பாதுகாப்பு நடவடிக்கை மூலம் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை விவாதம் இடம்பெறவுள்ளது.

குறித்த விவகாரம் பற்றி விவாதிப்பதற்காக இன்று நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு எதிரணி பிரதமர் கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கோரிக்கை விடுத்திருந்தார். ☞2

# பிளவடைகின்றது சஜித்தின் கூட்டணி



### ரணில் அரசுடன் கைகோர்க்க எம்.பிக்கள் சிலர் இரகசியப் பேச்சு

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ள கட்சிகள் சில அதிலிருந்து வெளியேறத் திட்டமிட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

**புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக அவர்கள் அரசுடன் இணைந்துகொள்வதற்கு அந்தக் கட்சிகளின் எம்.பிக்கள் சிலர் இரகசியமாகக் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.** ☞2

# நீங்கள் வாயால் சொல்வதைச் செயலில் நிறைவேற்ற 'மொட்டு' ஆதரவு வழங்குமா?




### ரணில், தினேஷிடம் சம்பந்தன் கேள்விக்கணை

ராஜபக்ஷக்களோ அவர்களது அணியினரோ எந்தவொரு காலத்திலும் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியவர்கள் அல்லர். இவ்வாறானதொரு நிலையில் அவர்களின் தயவுடன் ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் கூறுவதை எந்த அடிப்படையில் நம்பலாம்?

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி.

தன்னுடைய பதவிக் காலத்தினுள் அரசியல் தீர்வைக் காண்பேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அதேபோன்று, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ரணில் அரசைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பவேண்டும் என்று பிரதமர் தினேஷ் குணவர்தனவும் கருத்து வெளியிட்டிருந்தார். ☞2

# ஓகஸ்ட் 9இல் ரணில் 'அவுட்'

### ஜே.வி.பி. எச்சரிக்கை



ராஜபக்ஷக்கள் மக்களால் எப்படி விரட்டப்பட்டார்களோ அதேபோன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஓகஸ்ட் 9ஆம் திகதி விரட்டியடிக்கப்படுவார்.

– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார். ☞2

# கோட்டாவைக் கைதுசெய்!

### மட்டு. சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்து

இந்த நூற்றாண்டில் பாரியளவிலான இன அழிப்பை மேற்கொண்ட கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும்.

– இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் செயற்பாட்டாளர் அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ் தெரிவித்தார். ☞2




## ஜனாதிபதி மாளிகையில் கொள்ளையிடப்பட்ட பொருள்களுடன் மூவர் வசமாகச் சிக்கினார்கள்

ஜனாதிபதி மாளிகையில் கொள்ளையிடப்பட்ட சில பொருள்களுடன் மூன்று பேர் வெலிக்கடைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதி அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, ஜனாதிபதி மாளிகை பொதுமக்களால் கைப்பற்றப்பட்டிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு யன்னல் திரைகளுக்காகச் சுவரில் பொருத்தப்பட்டிருந்த தங்க முலாம் பூசப்பட்ட 40 பித்தளை பந்துகளைக் கொள்ளையிட்டு, அதனை விற்பனை செய்வதற்கு முயற்சித்தபோதே குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதானவர்கள் இராஜகிரிய – ஒபேசேகரபுரவைச் சேர்ந்த 28, 34 மற்றும் 37 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது. ☞2

## பெண்ணொருவர் வெட்டிக்கொலை!

வீடொன்றினுள் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வெலம்பொட, பரண பட்டிய பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளார் எனவும், அவரின் கழுத்தில் வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சில நாள்களுக்கு முன்னர் இந்தக் கொலைச் சம்பவம் ☞2

# மக்கள் எழுச்சியால் ராஜபக்ஷக்கள் விரட்டியடிக்கப்பட்டதை மறக்காதீர்!

### ரணிலிடம் பொன்சேகா இடித்துரைப்பு

மக்கள் எழுச்சிப் பலத்தின் முன்பாக ஆயுத பலம் தோற்றுப்போகும். இதனால்தான் ராஜபக்ஷக்கள் தப்பியோட நேர்ந்தது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணர்ந்துகொள்ள வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காலிமுகத்திடலில் அமைதி வழியில் ☞2



## மக்களால் பறிக்கப்பட்ட 2 துப்பாக்கிகளும் மீட்பு

நீள் துப்பாக்கி ஒன்று மற்றும் ரி – 56 ரகத் துப்பாக்கி ஒன்று தியவன்னாவ பாலத்துக்குக் கீழ் இருந்து கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அறிக்கை ஒன்றை இன்று வெளியிட்டு பொலிஸ் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த 13ஆம் திகதி பொல்துவ சந்தியில் மக்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின்போது இராணுவத்தினரிடம் இருந்து பறித்துச் சென்ற ஆயுதங்களாக இவை இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

## கோட்டாவைக் கைதுசெய்! .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் ஊடக சந்திப்பு இன்று மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.சிவயோகநாதன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் செயற்பாட்டாளர் அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அருட்தந்தை,

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் தமிழின அழிப்பை மேற்கொண்ட மஹிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ஷ போன்றவர்கள் அண்மையில் இலங்கையில் இருந்து தென்னிலங்கை மக்களால் விரட்டப்பட்டுள்ளார்கள். அனைவருக்கும் தெரியும் சர்வதேசத்துக்கும் தெரியும் இவர்கள் மேற்கொண்ட முள்ளிவாய்க்கால் இன அழிப்பு என்பது இந்த நூற்றாண்டிலேயே உலகிலேயே மேற்கொள்ளப்பட்ட முதலாவது இனவழிப்பாகும்.

இந்த அழிப்பை மேற்கொண்டவர்களுக்கு எதிராக தமிழர் தரப்பு பல்வேறு விதமான போராட்டங்களை முன்னெடுத்தது மாத்திரமல்ல, காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுடைய உறவுகள் கிட்டத்தட்ட ஆயிரத்து தொள்ளாயிரத்துக்கு அதிகமான நாள்களாப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள்.

ஐ.நா. சபையில் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தத் தமிழின அழிப்புக்கு அவர்கள் பொறுப்புக்கூற வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குப் பொறுப்பு கூறவேண்டும். தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடயத்தில் பொறுப்புக்கூற வேண்டும். அதே நேரத்தில் இன அழிப்பினுடைய உச்சமான போரின் கடைசி நாட்களில் மேற்கொள்ளப்பட்ட அத்தனை மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டும்.

ஆனால், இவர்கள் எதுவித பிரச்சினைகளும் வேறு நாடுகளுக்குத் தப்பிச் சென்றிருக்கின்றார்கள். ஆகவே, உலகத் தமிழினமும் உலகத்திலே நீதியை எதிர்பார்க்கின்ற ஒவ்வொருவரும் இவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

அதாவது ஐ.சி.சி. எனச் சொல்லப்படுகின்ற சர்வதேச நீதிமன்றத்துக்கு சர்வதேச நீதிப்பொறிமுறைகளுக்கும் முன்பாக இவர்கள் நிச்சயமாக நிறுத்தப்பட வேண்டும்.

எந்த நாட்டிலே இவர்கள் இருக்கின்றார்களோ அந்த நாட்டிலே இவர்கள் கைதுசெய்யப்படுவது மாத்திரமல்ல அவர்கள் நீதியின் முன்பாக நிறுத்தப்பட வேண்டும்.

உலகத்திலே செய்யப்பட்ட யூகோஸ்லாவியாவில் முன்னாள் அதிபராக இருந்த மிலோஸவிக் இப்படியான கொடூரத்தைச் செய்தமைக்காக ஐக்கிய நாடுகள் அல்லது பல்நாட்டு நீதிப் பொறிமுறையின் பின்னர் தன்னுடைய பதவிக் காலத்தின் பின்னர் நிறுத்தப்பட்டார். இதனை முன்னுதாரணமாகக் கொண்டு கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவர்களோடு கூட்டிணைந்தவர்கள் எந்த இடத்திலாவது கைதுசெய்யப்பட்டு நீதி முன் நிறுத்தப்பட வேண்டும். இவர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் – என்றார்.

## ஜனாதிபதி மாளிகையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு வடக்கு பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

## ஓகஸ்ட் 9இல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலிமுகத்திடல் மக்கள் போராட்டம் ஜூலை 14ஆம் திகதி வெற்றியுடன் முடிந்து விட்டது என்றும், அதன் பின்னர் அங்கு கிளர்ச்சிக்கான ஆயத்தங்களே நடைபெற்றன என்றும், அதனையே படையினர் அடக்கியுள்ளனர் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் கருத்துத் தெரிவித்த அநுரகுமார,

கொழும்பு – காலிமுகத்திடலில் இன்றும் போராடியவர்கள் மக்கள்தான். இன்றும் போராடுபவர்கள் அதே மக்கள்தான். இந்நிலையில், அமைதி வழியில் போராடும் மக்களைக் கிளர்ச்சியாளர்கள் என்று பொய் கூறி அவர்கள் மீது ஆயுதப் படைகளைக் கொண்டு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாக்குதல் நடத்த உத்தரவிட்டமை மாபெரும் அராஜகம் ஆகும். இது போராடும் மக்களுக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

'ரணில் வீட்டுக்குப் போ' என்பதே மக்களின் தற்போதைய கோரிக்கை. இதற்கு மதிப்பளித்து ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியிலிருந்து உடனடியாக விலகி வீட்டுக்குச் செல்ல வேண்டும். இல்லையேல் ராஜபக்சக்கள் போல் அடுத்த மாதம் (ஓகஸ்ட்) 9 ஆம் திகதி மக்களால் அவர் வீட்டுக்கு விரட்டியடிக்கப்படுவார் – என்றார்.

மே மாதம் 9ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகியிருந்தார். ஜூன் 9ஆம் திகதி பஸில் ராஜபக்ஷ விலகியிருந்தார். ஜூலை 9ஆம் திகதி கொழும்பில் மக்கள் எழுச்சிப் போராட்டத்தால் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ தப்பியோடி கடந்த 14ஆம் திகதி பதவி விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்ணொருவர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

68 வயதுடைய வயோதிபப் பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வெலம்பொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மக்கள் எழுச்சியால் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராடிய போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலுக்குப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூற வேண்டும். அதைவிடுத்து அவர், போராட்டக்காரர்கள் மீது பழிசுமத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை உடன் நிறுத்த வேண்டும்.

மக்கள் பலத்தை ஆயுத பலத்தால் ஒருபோதும் அடக்கவே முடியாது. இந்த மக்கள் பலம்தான் ராஜபக்சக்களை அதியுயர் பதவிகளிலிருந்து தூக்கியெறிந்தது. இதை ரணில் விக்கிரமசிங்க புரிந்து கொள்ள வேண்டும்.

ரணிலுக்கு எதிராகக் காலிமுகத்திடலில் போராடும் மக்களுக்கு எனது முழுமையான ஆதரவு தொடர்ந்தும் இருக்கும் – என்றார்.

## நீங்கள் வாயால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில், ரணில், தினேஷ் ஆகியோரின் கருத்து தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைக் கேட்டபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாயால் வாக்குறுதிகளை வழங்குவதில் ராஜபக்ஷக்களும் அவர்களின் கட்சியினரும் வல்லவர்கள். ஆனால், அவர்கள் வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. தேர்தல் காலங்களில் கூட சிங்கள மக்களுக்கு ராஜபக்ஷக்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதகாரணத்தால் அவர்களுக்கு வாக்களித்த மக்களே அவர்களை விரட்டியடிக்க வீதிக்கு வந்தனர்.

ஒட்டுமொத்த நாட்டு மக்களின் எழுச்சிப் போராட்டத்தால் ஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் இருந்து ராஜபக்ஷக்கள் விலகினாலும் தற்போது அந்தப் பதவிகளுக்கு அமர்த்தப்பட்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் ராஜபக்ஷக்களின் கட்சியினரின் ஆதரவுடன்தான் செயற்படுகின்றார்கள்.

எனவே, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் புதிய ஜனாதிபதியும் புதிய பிரதமரும் வாயால் சொல்வதை செயலில் நிறைவேற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் ஆதரவு வழங்குவார்களா என்பது கேள்விக்குறியே.

புதிய ஜனாதிபதியினதும் புதிய பிரதமரினதும் செயற்பாடுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

நாட்டின் நலன் கருதி – எமது மக்களின் நலன் கருதி நல்ல கருமங்களை அவர்கள் முன்னெடுத்தால் அவற்றுக்கு நாம் பூரண ஆதரவை வழங்குவோம் – என்றார்.

## புதன்கிழமை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், அந்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

27ஆம் திகதி அவசரகாலச் சட்டம் தொடர்பில் விவாதிக்கப்படவுள்ளது. அன்றைய தினத்தில் காலிமுகத்திடல் விவகாரம் குறித்து விவாதிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிளவடைகின்றது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வகட்சி அரசை அமைப்பதற்கான பேச்சுக்கள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்கும் அதேவேளை, இன்னுமொரு பக்கத்தில் கட்சித் தாவல்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் நடக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் சிலரும் அரசுடன் இணைந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## மின்சாரம் தாக்கி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரம் 6இல் கல்வி கற்று வந்த ஆர்.எம். நுவன் நெத்சர என்ற சிறுவனே பலியாகியுள்ளார்.

குறித்த சிறுவன் உறவினர் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தபோது, அருகில் உள்ள துடைப்பம் அருகே போடப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாயாப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கும்பல் மனநிலை ஆபத்தானது

மனிதர்கள் பெரும்பாலும் தனித்தனியார்களாக நல்லவர்கள். கூட்டத்தில் சேரும்போது கும்பல் மன நிலை (Mob Mentality) வந்து விடுகிறது அதுதான் ஆபத்தானது.

இலங்கை அரசியலில் இந்த கும்பல் மனநிலைப் போக்கின் செல்வாக்கு அதிகம். அது மோசமான பல பாதிப்புகளைத் தந்து நிற்கின்றமை கண்கூடு.

இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியமைபடி தீக்குச்சியை வைத்து விளக்கையும் ஏற்றலாம், வீட்டையும் கொளுத்தலாம். அந்தத் தீக்குச்சியை பற்ற வைக்கின்றவனின் மனநிலையில் தங்கி உள்ளது அதன் விளைவும் நன்மையும் தீமையும்.

அது போன்றதுதான் இலங்கை அரசியலில் மனித மனநிலைகளின் விடயங்களும். இவற்றின் பாதிப்பை அதிகம் கண்டவர்கள் தமிழர்கள்தான்.

பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டமை தொடக்கம் தமிழர்களுக்கு எதிராக வரிசைக்கிரம மாக கட்டவிழ்ந்த கலவரங்கள், யாழ். பொதுநூலக எரிப்பு வரை பல அனர்த்தங்கள் இந்த கும்பல் மன நிலையின் விளைவுதான்.

தமிழருக்கு ஏதேனும் அதிகாரப் பரவலாக்களை உறுதிப்படுத்துவதற்கு வழி செய்த இலங்கை – இந் திய ஒப்பந்தம் செய்யப்பட்ட போதும், அந்த ஒப்பந்த வாசகத்தில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட போதும் கூட, அவற்றைத் தடுக்க இத்தகைய கும்பல் மனநிலைத் திட்டம் சிங்களப் பேரினவாதத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால், அதிர்ஷ்டவசமாக இந்தியா போன்ற பல மான தரப்புகளின் அழுத்தங்கள், கட்டாயங்கள் போன்றவை இருந்தமையால் – அந்த கும்பல் மன நிலையை மீறி, ஓரளவு சுயாதிபத்தியத்தைப் பிரயோகித் துச் செயல்பட வேண்டிய நெருக்கடி கூடி வந்தமை யால் – அப்போதைய ஜெயவர்த்தனா அரசு அத்தகைய கும்பல் மனநிலையை மீறிச் செயல்பட்டு விடயங்களை நிறைவேற்றியது.

இப்போது மீண்டும் கும்பல் மனநிலை மீது இலங் கையின் அரசியல் சக்திகள் அதிக நாட்டம் செலுத்த முற்பட்டிருக்கின்றன.

மக்கள் ஒன்று திரண்டு போராடுவது, தமது கருத்தி யலை ஐக்கியமாக வெளிப்படுத்துவது, ஓர் எழுச்சியை ஏற்படுத்துவது எல்லாம் நியாயமான செயற்பாடுகளே. அவற்றை கும்பல் மனநிலை என்ற படிமுறைக்குள் உள்ளடக்கி ஒதுக்கி விட முடியாது. அது ஜனநாயகத் தின் மறுக்க முடியாத ஓர் உரித்து. ஆனாலும், அந்த உரித்துக்கும் ஓர் எல்லை வரையறை உண்டு. அப்படி மக்கள் திரளுவதை – கூட்டமாகச் சேர்வதை – வன்முறைக்கு தூண்டும் கும்பல் மனநிலையாக தொடர்ந்து மாற்ற எத்தனிப்பது ஆபத்தானது.

மக்கள் ஒன்று திரளுகை மே 9 இல், அரசியலில் இருந்து ராஜபக்ஷக்களை வெளியேற்றியது. அது எல்லை மீறாத புரட்சி. அதுவே ஜூலை 9 இல் கும்பல் மனநிலையாக மாற்றப்பட்டு, வன்முறை கட்டவிழ்ந்த எழுச்சியாகியது. அதன் விளைவாக அரச நிர்வாகக் கட்டடங்கள் பல கும்பல் வசமாகின.

எதேச்சாதிகாரி கோட்டாபய ராஜபக்ஷ பதவியை விட்டு ஓடினாராயினும், அந்தக் கும்பல் மனநிலைப் போக்கைத் தொடர்ந்து உருவேற்றி, தமது அரசியல் தேவைகளுக்கெல்லாம் பயன்படுத்த முயல்வது – அதற்குத் தமிழர் தரப்பு தூண்டித் துணை போவது – ஆபத்தானது. ஏனெனில் இந்தப் பண்பியல்பின் பாதிப்பை எதிர்காலத்தில் சிறுபான்மையினர்தான் – குறிப்பாகத் தமிழர்கள்தான் – எதிர்கொள்ள நேரிடும். அதன் விவரத்தை இன்னொரு தடவை இப்பத்தியில் பார்ப்போம்.

# அடுத்த நாடாளுமன்றில் 22 ஆவது வரைவு 19 திருத்தத்துக்கு அப்பால் செல்லவும் தயார்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்



அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது 22 ஆவது திருத்தச்சட்ட வரைவு சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ள நீதி, அரசமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச் சாலைகள் விவகார அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, 19 ஆவது திருத்தத் திற்கும் அப்பால் செல்வதற்கு தயார் என்று அறிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இடைக்கால அமைச் சரவையின் நியமனத்தின்போது நீதி, அரச மைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச் சாலைகள் விவகார அமைச்சைப் பொறுப் பேற்றுக்கொண்ட கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை மையில் மாற்றங்களை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு 22 ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கான வரைவு தயாரிக் கப்பட்டுள்ளது.

அந்த வரைவை அடுத்த நாடாளுமன்ற அமர்வில் சபையில் சமர்ப்பிப்பதற்கு நட வடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மேற்படி வரைவில் மேலும் திருத்தங்களைச் செய்வதற்கும் இணக்கப்பாடுகள் எட்டப்பட் டுள்ளன.

மேலும், தற்போதுள்ள அரசியல் நிலைமைகளின் பிரகாரம் 22 ஆவது திருத் தச்சட்ட மூலத்துக்கான வரைவில் மேலும் தி ருத்தங்களைச் செய்வதற்கு தயாராகவே உள்ளோம். குறிப்பாக அத்திருத்தங்கள் 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் செல் வதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

இந்தச் செயற்பாட்டை நடைமுறைச்சாத்தி யமாக்குவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று கோருகின்றேன். –என்றார்.

தற்போது முகங்கொடுக்க நேர்ந்துள்ள நெருக்கடி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மற் றும் நாடாளுமன்றத்திற்கும் இடையில் அதி காரச் சமநிலையை ஏற்படுத்தும் வகையில் நாடாளுமன்றத்துக்கும் பொதுமக்களுக்கும் கூட்டாகப் பொறுப்புக் கூறும் அமைச்சர வைக்கும் மற்றும் அரசமைப்புப் பேரவைக்கும் ஒருசில அதிகாரங்களை ஒப்படைக்கும் வகையிலும் அரசமைப்பில் திருத்தம் மேற் கொள்வது பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளதாக கூறப்பட்டு அமைச்சர் விஜதாஸவால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படைச் சட்டமூலத்துக்கு கடந்த மாதம் 20 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# இறக்குமதி செய்யும் எரிவாயுகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

அடுத்த வாரத்தில் மேலும் ஆறு எரிவாயு கப்பல்கள் நாட்டை அடை யத் திட்டமிடப்பட்டுள்ளன என லிற்றோ நிறுவனம் தெரிவித்துள் ளது.

மேலும் இம்மாதத்தில் எரிவாயு இருப்பு 33 ஆயிரம் மெற்றிக் தொன்னாக இருப்பதோடு பொதுமக் களுக்கு தொடர்ந்து எரிவாயு விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் இறக்குமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை எரிவாயு சிலிண் டர்களின் எண்ணிக்கை சுமார் 80 ஆயிரமாக இருந்த போதிலும், தற்போது அதனை ஒரு லட்சமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக லிற்றோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# அரச நிறுவனங்களுக்கு ஊழியர்களை அழைக்கும் செயற்பாடு மேலும் நீடிப்பு

எரிபொருள் சிக்கல் காரணமாக அரச நிறுவனங்களுக்கு ஊழியர்களை அழைப்பது தொடர்பில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி ஏற்கவே அரச நிறுவனங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களை அழைக்கும் செயற்பாடு மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை போன்று பாகிஸ்தானிலும் மக்கள் வீதியில் இறங்கும்நாள் வெகுதொலைவிலில்லை

## முன்னாள் பிரதமர் இம்ரான்கான் கூறுகிறார்



இலங்கை போன்ற ஒரு தருணம் பாகிஸ்தானில் ஏற்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை என முன் னாள் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

இலங்கைபோன்றுபாகிஸ்தானில் ஹக்கீகி ஆசாதிக்காக மக்களை வீதி களை நிரப்பும் நாள் வெகுதொலை வில் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

டுவிட்டரில் இதனை தெரிவித் துள்ள அவர் அசீவ்ஜர்தாரி ஷெரீப் குடும்ப மாபியா மூன்று மாதத்தில் நாட்டை அரசியல் பொருளாதாரத்தில் பலவீனப்படுத்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானை கூறையாடி 30 வருடகால மாக குவித்த சொத்துக்களை அவர்கள் சேமித்துள்ளனர், அரச நிறுவனங்கள் எவ் வளவு காலம் இதனை அனுமதிக்கும் என்பதே எனது கேள்வி என இம்ரான்கான் கேள்வி எழுப்பியுள்ளார்.

# உக்ரைன் போர்க்கப்பல் மீது ரஷ்யா ஒப்பந்தத்தை மீறித் தாக்குதல்



உக்ரைன் உலகின் மிகப்பெரிய தானியங்கள் ஏற்றுமதியாளராக இருந்து வரும் சூழலில், அந்த நாட்டின் மீது கடந்த பெப்ரவரி மாதம் போரை தொடங்கிய ரஷ்யா, கருங்கடல் பகுதியில் போர்க் கப்பல்களை நிறுத்தி அந்த கடல் வழியாக உக்ரைன் தானியங்கள் பிற நாடுகளுக்கு கொண்டு செல்லப்படுவதற்கு தடை ஏற்படுத்தியது. இது சர்வதேச அளவில் உணவு நெருக்கடியை ஏற்படுத்தியதால், தானிய ஏற்றுமதியை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சிகளை ஐ.நா. முன்னெடுத்தது. அதன் பலனாக கடந்த வெள்ளிக்கிழமை தானிய ஏற்றுமதி ஒப்பந்தத்தில் ரஷ்யாவும், உக்ரைனும் கையெழுத்திட்டன. அந்த ஒப்பந்தத்தில் கருங்கடல் பகுதியில் உள்ள உக்ரைன் துறைமுகங்கள் மீது தாக்குதல் நடத்தப்படாது என ரஷ்யா உறுதியளித்திருந்தது.

ஆனால் ஒப்பந்தம் கையெழுத்தான சில மணி நேரத்திலேயே ஒப்பந்தத்தை மீறி கருங்கடலில் உள்ள உக்ரைனின் ஒடேசா துறைமுகம் மீது ரஷ்ய படைகள் தாக்குதல் நடத்தின. துறைமுகத்தின் மீது ரஷ்யா சரமாரியாக ஏவுகணைகளை வீசி தாக்கியதாக உக்ரைன் குற்றம்சாட்டியது. எனினும் தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து உக்ரைன் தெரிவிக்கவில்லை. ஒப்பந்தத்தை மீறி நடத்தப்பட்ட இந்த தாக்குதலை ஐ.நா. வன்மையாக கண்டித்தது.

இந்த நிலையில் ஒடேசா துறைமுகத்தில் ராணுவ நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருவதாக ரஷ்ய ராணுவம் தெரிவித்துள்ளது. அந்த வகையில் நேற்று முன்தினம் ஒடேசா துறைமுகத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த உக்ரைனின் போர் கப்பல் அழிக்கப்பட்டதாக ரஷ்யா தெரிவித்தது. அதுமட்டும் இன்றி ஒடேசா துறைமுகத்தில் அமெரிக்காவால் வழங்கப்பட்ட கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த ஆயுத கிடங்கும் நிர்மூலமாக்கப்பட்டதாக ரஷ்யா ராணுவம் கூறியது. எனினும் இது குறித்து உக்ரைன் தரப்பு உடனடியாக எந்த விளக்கமும் அளிக்கவில்லை. இதனிடையே ஒப்பந்தத்தை மீறி ஒடேசா துறைமுகம் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியது காட்டுமிராண்டித்தனம் என சாடிய உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, இந்த தாக்குதல் ரஷ்யாவுடனான பேச்சுவார்த்தைக்கான சாத்தியத்தை அழித்துவிட்டதாக கூறினார். அதே சமயம் ஒப்பந்தத்தில் வெளிப்படையான மீறல் இருந்தபோதிலும் தானிய ஏற்றுமதியை மீண்டும் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து நடந்து வருகின்றன என ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

## மீண்டும் வான்வெளியை ஆள வரும் ஆகாயக் கப்பல் 2026 முதல் ஐரோப்பாவில் சேவையை தொடங்க திட்டம்




தொழில்நுட்ப சுழற்சி சக்கரத்தின் அடுத்த கட்டமாக 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வான்வெளியை ஆண்ட ஆகாய கப்பல்கள் மீண்டும் வருகின்றன. உலகெங்கும் அதற்கான முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படும் நிலையில் இன்னும் 4 ஆண்டுகளில் ஐரோப்பாவில் ஆகாய கப்பல்கள் சேவை தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

20 நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிவியல் கண்டுபிடிப்புகளில் அற்புதமாக வர்ணிக்கப்பட்ட ஆகாய கப்பல்கள் வான்வெளியை ஆண்டன. ஆகாய மார்க்க பயணத்திற்கு மட்டுமின்றி முதல் உலகப்போரில் ஜெர்மனியால் ஆயுதமாகவும் பயன்படுத்தப்பட்ட ஆகாய கப்பல்கள் விமானங்களின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு பின்னர் வழக்கொழிந்து போயின. பூமி வெப்பமாதலாம் உலகம் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருப்பதால் கார்பன் உமிழ்வை குறைக்கும் நோக்கில் ஆகாய கப்பலுக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் முயற்சிகள் தொடங்கியுள்ளன. முந்தைய ஆகாய கப்பல்களின் சாதகமான அம்சங்களையும் தற்போது உள்ள தொழில்நுட்பங்களையும் ஒருங்கிணைத்து hybrid air vehicles என்ற பிரிட்டிஷ் நிறுவனம் நவீன ஆகாய கப்பல்களின் தயாரிப்பை இந்த ஆண்டே முழு வீச்சில் தொடங்குகிறது.

ஆகாய கப்பலில் உள்ள காற்றறைகள் நிரப்பட்ட ஹீலியம் ஆகாய கப்பல் மேலெழும்பு உதவும். ஆகாய கப்பலில் பொருத்தப்பட்ட இரட்டை இன்ஜின்கள் அதனை முன்னோக்கி செலுத்தும். ஹீலியன்வாயுவால் மேலெழுவதால் விமானங்களுடன் ஒப்பிடுகையில் இதன் கார்பன் உமிழ்வு வெறும் 10% மட்டுமே. இதனால் இதன் வேகம் மிகவும் குறைவு. விமானங்களின் வேகம் மணிக்கு 804 கி.மீ. என்றால், இதன் வேகம் மணிக்கு 129 கி.மீ. மட்டுமே அதிகபட்சம் 20 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கலாம். 5 நாள்கள் பயணித்து அதிகபட்சம் 7,500 கி.மீ. தொலைவை கடக்கலாம். ஸ்பெயினை சேர்ந்த air nostrum என்ற நிறுவனம் ஆகாய கப்பல்களை வாங்கி 2026ம் ஆண்டில் சேவையை தொடங்கதிட்டமிட்டுள்ளது. 2030ம் ஆண்டிற்குள் முழுக்க முழுக்க மின்சார இன்ஜி னுக்கு மாறுவதால் கார்பன் உமிழ்வு அறவே இருக்காது என்று பிரிட்டிஷ் நிறுவனம் உறுதி கூறுகிறது. இதேபோல் அமெரிக்காவை சேர்ந்த நிறுவனமும் ஆகாய கப்பல் சந்தைக்கு குறிவைத்துள்ளது. முதல் கட்டமாக சரக்கு போக்குவரத்தையும், மக்களின் நம்பிக்கையை பெற்ற பின்னர் பயணிகள் சேவையையும் தொடங்க அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. தம்மை ஒழித்துக்கட்டி விமானங்களுக்கு போட்டியாக மீண்டும் முளைத்துள்ள ஆகாய கப்பல்கள் இனி வான்வெளியை ஆளுமா என்பதற்கு இந்த முயற்சிகளின் முடிவே பதில் தரும்.

## குரங்கம்மை தொற்று வேகமாக பரவி வருவது கவலை அளிக்கிறது

### உலக சுகாதார அமைப்பை சேர்ந்த டாக்டர் வேதனை





உலகின் பல்வேறு நாடுகளிலும் குரங்கம்மை தொற்று வேகமாக பரவி வருவது கவலை அளிப்பதாக உலக சுகாதார அமைப்பை சேர்ந்த டாக்டர் பூனம் கெத்ரபால் சிங் தெரிவித்துள்ளார். ஆப்பிரிக்க நாடுகளில் பரவிய குரங்கம்மை தொற்று, உலகின் பல்வேறு நாடுகளிலும் பரவியுள்ளது. இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல், அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா உட்பட 75 நாடுகளில் குரங்கம்மை பரவியுள்ளது. உலகம் முழுவதும் 16 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குரங்கம்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக உலக சுகாதார அமைப்பு, மருத்துவ அவசர நிலையை பிரகடனம் செய்துள்ளது.

குரங்கு அம்மை என்பது அரிதான ஒரு வைரஸ் தொற்றாகும். இதனால் லேசான பாதிப்புகளே ஏற்படும் என்றும், இதனால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோர் சில வாரங்களில் குணமடைந்துவிடுவார்கள் எனவும், பிரிட்டனின் தேசிய சுகாதார சேவை தெரிவித்துள்ளது. இந்நிலையில், குரங்கம்மை வேகமாக பரவி வருவது கவலை அளிப்பதாக உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய இயக்குநர் டாக்டர் பூனம் கெத்ரபால் சிங் தெரிவித்துள்ளார்.

போதிய முன்னெச்சரிக்கை மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் குரங்கம்மை பரவலை தடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே தமிழகத்தில் யாருக்கும் குரங்கம்மை தொற்று இல்லை என சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். சென்னையில் கொரோனா தடுப்பூசி முகாமினை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வெளிநாடுகளில் இருந்து தமிழகம் திரும்புவோர் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என குறிப்பிட்டார். குரங்கம்மை ஒருவரிடமிருந்து மற்றொரு வருக்கு அவ்வளவு எளிதில் பரவாது இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் அபாயம் என்பது மிகவும் குறைவு என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

## தென் ஜப்பானில் எரிமலை வெடிப்பு மக்கள் வெளியேற வலியுறுத்தல்

தெற்கு ஜப்பான் ககோஷிமாவில் உள்ள சகுராஜிமா எரிமலையில் இருந்து பாறைகள் வெடித்து தீப்பிழம்புகள் வெளியேறி வருகின்றன. இதனால், சுற்றுவட்டாரத்தில் உள்ள மக்கள் உடனடியாக வெளியேறும்படி அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. எரிமலையின் வெடிப்பினாலான சேதம் குறித்து உடனடியாக தகவல்கள் எதுவும் இல்லை என்று துணை தலைமை அமைச்சரவை செயலாளர் யோஷிஹிகோ இசோசாகி தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, சேதங்களைத் தடுப்பதை உறுதி செய்ய உள்ளூர் நகராட்சியுடன் பணியாற்றுமாறு அறிவுறுத்தியுள்ளார். எரிமயைல் இருந்து சுமார் 2.5 கிலோ மீற்றர் தொலைவில் பெரிய எரிமலை தீப்பிழம்புகளை கக்கி வருகிறது. அதே நேரத்தில் இதனால் எழும் புகை சுமார் 300 மீற்றர் உயரத்திற்கு எட்டியுள்ளது. இதனால், சகுராஜிமாவின் எரிமலை பள்ளத்தில் இருந்து மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள அரிமுரா நகரம் மற்றும் புருசாடோ நகரத்தின் குடியிருப்பு பகுதிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று எரிமலை கண்காணிப்பு பிரி வின் சுயோஷி நகாட்சுஜி தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழர்களுக்கு உரிமை கிடைக்கும்வரை போராடுவோம் நெல்லையில் நாம் தமிழர் கட்சியின் சீமான் சூளுரை

தமிழ்த்தேசியத் தன்னுரிமைக்கட்சியின் ஏற்பாட்டில் பாளையங்கோட்டையில், தமிழக மக்கள் தன்னாட்சி மாநாடு நேற்று நடைபெற்றது.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

உயிரை இழக்கலாம். ஆனால், உரிமையை இழக்கக்கூடாது. எந்த இனம் தனது உரிமையை இழக்கிறதோ, அந்த இனம் அழிந்து போய்விடும், என்று சீமான் தனது உரையில் குறிப்பிட்டார்.

நம் உரிமையை இழந்து வருவதால்தான் பலரும் நமது நாட்டில் அத்துமீறி உரிமை கொண்டாடி வருகிறார்கள். தமிழ்நாட்டில் 6 லட்சம் கோடி ரூபா அரசுக்கு கடனாக உள்ளது. இந்த நேரத்தில் 80 கோடியில் பேனாச் சின்னம் வைக்கத் திட்டமிட்டுள்ளனர். இதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். முன்பு உறங்கிக் கொண்டிருந்தோம். தற்போது விழித்து விட்டோம் இதை வைக்கவிட மாட்டோம். நமது வரலாற்றைப் படிக்க வேண்டும். வரலாற்றைப் படைக்கவும் வேண்டும். வரலாறாய் வாழ வேண்டும். அறிவைக் கடன் கொடுத்தவன் தமிழன், என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் ஆட்சி அதிகாரம் யாரிடமும் இல்லை, இருந்தாலும் சிங்களவர்கள் இன்னும் தமிழக மீனவர்களை எல்லை தாண்டி வந்து விட்டனர் என கைது செய்கிறார்கள். ஆனால் ஒரு கேரளா மீனவர்களை அவர்களால் கைது செய்ய முடியாது. அந்த அளவிற்கு நமது நாட்டை திராவிட ஆட்சி அழித்து வைத்துள்ளது.

கடந்த 8 ஆண்டு ஆட்சியில் பிரதமர் மோடி எதுவும் சாதிக்கவில்லை. நாங்கள் சமநீதி, தனி அதிகாரம் கேட்கின்றோம். தமிழர்களுக்கு உரிய அனைத்து உரிமைகளும் கிடைக்கும் வரை நாங்கள் போராடுவோம், என்றும் சீமான் தெரிவித்திருக்கிறார்.





# நாளை சத்தியாக்கிரகப் போராட்டம் காங்கிரஸ் கட்சியால் அறிவிப்பு

இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு தொடங்கிய 'நஷனல் ஹெரால்ட்' என்ற பத்திரிகையை மேம்படுத்த காங்கிரஸ் கட்சி 90 கோடி கடன் கொடுத்தது. அதைத்திருப்பி செலுத்தாத நிலையில், அந்தப் பத்திரிகை நிறுவனத்தை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும், அவரது மகன் ராகுல் காந்தியும் இயக்குநர்களாக உள்ள 'யங் இந்தியா' நிறுவனம் கையகப்படுத்தியது.

இதையடுத்து, 'அசோசியேட்டட் ஜேர்னல்ஸ்' என்ற குறித்த நிறுவனத்தின் இரண்டாயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை 'யங் இந்தியா' அபகரித்துவிட்டதாக பா.ஜ.கவின் மூத்த தலைவர் சுப்பிரமணிய சாமி வழக்குத் தொடுத்து அது டெல்லி கோர்ட்டில் விசாரணையில் உள்ளது.

இதில் நடந்துள்ளதாகக் கூறப்படுகிற சட்ட விரோத பணப்பரிமாற்றம் பற்றி அமுலாக்கப்பிரிவு இயக்குநரகம் விசாரணை நடத்துகிறது. இதில், ராகுல் காந்தியிடம் 5 நாள்கள் 50 மணி நேரத்துக்கு மேலாக விசாரணை நடத்தப்பட்டது. 75 வயதான காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு 2 முறை முதலில் சம்மன் அனுப்பியும் அவர் கொரோனாத் தொற்றால் ஆஜராகவில்லை.

அவரது உடல்நலம் சீரானதைத் தொடர்ந்து அவரை கடந்த 21ஆம் திகதி விசாரணைக்கு ஆஜராகுமாறு புதிய சம்மன் வழங்கப்பட்டது. இதனையடுத்து டெல்லி அமுலாக்கப்பிரிவு இயக்குநரகத்துக்கு விசாரணைக்காக சோனியா காந்தி, தனது மகன் ராகுல் காந்தி, மகள் பிரியங்கா காந்தி ஆகியோருடன் சென்றிருந்தார். அவரிடம் 2 மணி நேரம் விசாரணை நடத்தியபின்னர் விசாரணை முடிவடையாத நிலையில் மீண்டும் விசாரணை நடத்த அமுலாக்கப்பிரிவு இயக்குநரகம் முடிவு செய்தது.

இந்த நிலையில், சோனியாகாந்தியிடம் அமுலாக்கத்துறை விசாரணை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை ஜூலை 26 இல் சத்தியாக்கிரகப் போராட்டத்தை காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

# என்னை எதிர்த்துப் பேசுபவர்கள் முழுமையாக தமிழில் பேச முடியுமா?

## புதுவை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கேள்வி



புதுக்கோட்டையில் தனியார் கேரளா ஆயுர்வேத சிகிச்சை மருத்துவமனை ஒன்றை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய புதுச்சேரியின் துணை நிலை ஆளுநரான தமிழிசை சவுந்தரராஜன், திரௌபதி முர்மு ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் உண்மையான சமூக நீதி காக்கப்பட்டுள்ளது, என்று தெரிவித்துள்ளார்.

தேசிய கல்விக் கொள்கையை தாய் மொழியை ஊக்கப்படுத்துவதற்காகத்தான் பிரதமர் கொண்டு வந்துள்ளார். புதிய கல்விக் கொள்கையால் இன்னொரு மொழியை மாணவர்கள் கற்றுக் கொள்ள முடியும் என்றுதான் நான் கூறினேன். ஆனால், இந்தியைப் பற்றிக் கூறுகிறேன் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனது சமூக வலைதளத்தில் பல்வேறு கருத்துக்களை பின்னூட்டமிட்டு வருகின்றனர்.

ஒரு சிலர், தமிழகத்தில் ஏன் இவர் வாலை நீட்டுகிறார் என்று கேட்கிறார்கள். எனது உயிர் தமிழகத்தில் தான் போகும், நான் ஒரு தமிழச்சி. வேறு மாநிலத்திற்குப் பணி நிமித்தமாகத்தான் சென்றுள்ளேன். தமிழகத்தில் ஒரு பிரச்சினை என்றால் அதைப் பேசுவதற்கு எனக்கு முழு உரிமை உண்டு. எனது பெயரில் மட்டுமல்ல எனது உயிரிலும் தமிழ் உள்ளது. என்னை எதிர்த்துப் பேசுபவர்களால் முழுமையாகத் தமிழில் பேச முடியுமா?, என்று தமிழிசை சவுந்தரராஜன் கேள்வியும் எழுப்பியுள்ளார்.

# பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும்

## இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் உறுதி

ஜம்மு மற்றும் காஷ்மீரில் நடந்த கார்கில் வெற்றி தின நிகழ்ச்சியில் இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார்.

நிகழ்வில் உரையாற்றிய அவர், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பற்றி நாடாளுமன்றத்தில் நிறைவேறிய தீர்மானத்தை செயல்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்த, இருக்கின்ற பாகிஸ்தானால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட காஷ்மீர், வருங்காலத்திலும் தொடர்ந்து இந்தியாவுடனேயே இருக்கும், என்று கூறியுள்ளார்.

ஒரு வலிமையான மற்றும் நம்பிக்கையான புதிய இந்தியா போதிய அம்சங்களுடன் உள்ளது. தீங்கான கண்ணோட்டம் கொண்டுள்ள எவர் ஒருவருக்கும் சரியான பதிலடி தரப்படும். இந்தியாவை சர்வதேச அளவில் ஒரு சூப்பர் பவர் நாடாக ஆக்குவதுஎன்பது, நமதுமறைந்தவீரர்களுக்கான சரியான அஞ்சலியாக இருக்கும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.






# அதிக வருமான வரி செலுத்திய நடிகர் ரஜினிக்கு விருது

## ஆளுநர் தமிழிசை வழங்கினார்

தமிழகம் – புதுவை அளவில் அதிக வருமான வரி செலுத்தியவர்களுக்கு விருது வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. இதில் புதுவை ஆளுநர் தமிழிசை கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார். இந்த விருது நடிகர் ரஜினிக்கும் வழங்கப்பட்டது. ரஜினியின் சார்பில் அவரது மகள் ஐஸ்வர்யா இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு








# தம்பலகாமத்தில்நேற்று விவசாயிகளுக்கு உரம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் கமநல அபிவிருத்தி திணைக்கள பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கான உரம் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. கடந்த காலங்களில் விவசாயிகள் எதிர் நோக்கிய பாரிய பிரச்சினையாக இருந்த யூரியா உரம் தற்போது மானிய அடிப்படையில் 10 ஆயிரம் ரூபாவுக்கு ஒரு மூடை என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. 42 ஆயிரம் ரூபாவாக இருந்த பசளை தற்போது இந்த விலைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தம்பலகாமம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பதில் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.விஜயகுமாரி தலைமையில் இடம்பெற்ற உரம் வழங்கும் நிகழ்வு கமநல திணைக்களத்தில் இடம் பெற்றது. இம்முறை தம்பலகாமம் கமநல சேவைக்குட்பட்ட பகுதியில் 2,805.75 ஏக்கர் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. 761 விவசாயிகள் இதனை முன்னெடுக்கின்றனர்.

# அறுபது வயதுக்கு மேல் இடமாற்றம் வழங்காதீர்!

## கிழக்கு ஆளுநரிடம் கோரிக்கை

கிழக்கு மாகாணத்தில் மாகாண சபை நிர்வாகத்துக்குட்பட்ட அரச திணைக்களங்களில் கடமையாற்றும் 60 வயதை பூர்த்திசெய்த அரச உத்தியோகத்தர்களை வருடாந்த இடமாற்றத்துக்கு உட்படுத்த வேண்டாமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அரச உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வுக்கான வயது எல்லை, கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் 65ஆக நீடிக்கப்பட்டு, இது தொடர்பாக அரச நிர்வாக சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டு, அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 60 வயதை பூர்த்தி செய்த அலுவலர்களை இடமாற்றம் செய்யலாமென சுற்றறிக்கையில் தெரிவிக்கவில்லை. மேலும், தற்போது மிக இக்கட்டான காலகட்டத்தில் வாழ்க்கை செலவும் அதிகரித்துள்ள நிலையில், இவ்வாறான இடமாற்றத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதை நிறுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ள நிலையில், அனேகமானவர்கள் நோயாளிகளாக உள்ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, 60 வயதுக்கு மேற்பட்டவர்களை இடமாற்றம் செய்வதை நிறுத்தி, அந்தந்த அலுவலகங்களில் கடமையாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாழைச்சேனையில் வீடு புகுந்து திருடியவர் வசமாகச் சிக்கினார்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி பிரதேசசெயலாளர்பிரிவிலுள்ள வாழைச்சேனை நெசவு வீதியிலுள்ள வீட்டு சமயலறை ஜன்னல் வழியாக உள்நுழைந்த திருடன் வீட்டின் பதினைந்து வயதுடைய சிறுமியின் தங்க மாலையை அறுக்க முற்பட்ட போது சிறுமி சத்தம் எழுப்பிய நிலையில்தப்பிசென்றுள்ளான்.

அதிகாலை 3 மணியளவில் வந்த திருடன் அலுமாரியை உடைத்து அதிலிருந்த இருபத்தையாயிரம் ரூபா பணத்தை எடுத்ததன் பின்னர் அங்கு உறங்கிக் கொண்டிருந்த சிறுமியின் கழுத்தை நசுக்கி தங்க மாலையை அறுத்த நிலையில் சிறுமி சத்தம் போட்டதன் காரணமாக வீட்டில் இருந்தவர்கள் விழித்தெழ, மாலையை எடுக்காமல் திருடன் தப்பிச் சென்றுள்ளான்.

சிறுமி கூறிய அடையாளத்திற்கமைய மேற்படி திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞனை வாழைச்சேன பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த இளைஞன் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே பல தடவைகள் கைது செய்யப்பட்டவர் என்றும், போதைப்பொருள் பாவனையால் பலமுறை சிறைச்சாலைக்கு சென்று வந்தவர் என்றும் வாழைச்சேனை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிலசந்த பண்டார தெரிவித்தார்.







# இளைஞரை ஆற்றுப்படுத்தல்; மட்டக்களப்பில் செயலமர்வு

குழப்பம் மிகு சமகாலச்சூழலில் இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை நிலை நிறுத்துதல் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வளங்களை இளைஞர், யுவதிகள் கையாளும் விதம் மற்றும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுதல் போன்றவை தொடர்பிலான செயலமர்வு ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமைமட்டக்களப்புசாள்ஸ்மண்டபத்தில்நடைபெற்றது.

மட்டக்களப்பு கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் இயக்குநர் ஏ.ஜேசுதாசனது ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தற்போதைய கால கட்டத்தில் இளைஞர், யுவதிகள் எதிர்கொண்டுள்ள சவால்கள், இளைஞர், யுவதிகள் எதிர்கெண்டுள்ள பொருளாதார சிக்கல்கள் மற்றும் நவீன தொடர்பாடல் சாதனங்களின் சாதக, பாதக நிலைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து சிரேஷ்ட வளவாளர்களான இருதயநாதன் மற்றும் கே. கணேசமூர்த்தி ஆகியோர் விளக்கமளித்தனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட இளைஞர், யுவதிகள் எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பிலும் அவற்றுக்கு எவ்வாறான தீர்வுகளை முன் வைப்பது தொடர்பிலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டிருந்தன.

இந்த செயலமர்வில் மட்டக்களப்பு கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் சமாதான செயற்திட்ட இணைப்பாளர் இ.கிறிஸ்டி மற்றும் கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# கோட்டா மற்றும் மஹிந்தவுக்கு கனடா தடை விதிக்கவேண்டும்!

## ஹரி ஆனந்த சங்கரி கோரிக்கை



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக கனேடிய அரசு தடைகளை விதிக்க வேண்டும் என்று அந்நாட்டின் ஆளும் லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் சமகால அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் ஒட்டாவாவில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை மிகக் கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதற்கு அங்கு ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் பின்பற்றிவந்திருந்த தவறான கொள்கைகளே காரணமாக உள்ளன.

குறிப்பாக, போர் முடிவடைந்து 13 ஆண்டுகளாகின்றபோதும், பாதிக்கப்பட்ட தரப்பினரை மேம்படுத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவில்லை. அதேநேரம், அந்தப்போரில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் பொறுப்புக்கூறப்படவில்லை.

குறிப்பாக, 2008, 2009 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இலங்கையின் தமிழர்களின் தாயகப்பகுதிகளில் நடத்தப்பட்ட கொடூரங்களுக்கு இன்னமும் பொறுப்புக்கூறப்படவில்லை. இதற்கு பொறுப்புக்கூறவேண்டிய தலைவர்களின் பிரதான நபர்களாக இருப்பவர்கள் கோட்டாபய ராஜபக்ஷவும், மஹிந்த ராஜபக்ஷவுமே ஆவர்.

இவ்வாறான நிலையில் மக்கள் புரட்சியின் காரணமாக கோட்டாபய ராஜபக்ஷ தற்போது இலங்கையில் இருந்துவெளியேறி சிங்கப்பூரில் தங்கியிருக்கின்றார். அங்கிருந்து தான் அவர் தனது இராஜினாமாவைச் செய்துமுள்ளார்.

அதேபோன்று பிரதமராக இருந்த அவருடைய சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவும் இப்போது பதவியில் இருந்து விலகியுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் கோட்டாபயவும், மஹிந்தவும் தமக்கு காணப்பட்ட குற்றவியல் வழக்கு விலக்கீட்டு சிறப்புரிமைகளை இழந்துள்ளனர்.

ஆகவே, அவர்கள் மீது பொறுப்புக்கூறலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். குறிப்பாக, சர்வதேச தரப்புக்கள் இந்த விடயத்தில் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

கடந்தகாலத்தில், சர்வதேச தரப்புக்கள் அவர்களை சுதந்திரமாக நடமாடுவதற்கு அளித்த வெளியை கைவிட்டு, உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அனைத்து அரசாங்கங்களிடத்திலும் கோருகின்றேன்.

அத்துடன், கனேடிய அரசாங்கம் கோட்டாபய, மஹிந்த ஆகிய இருவரும் நாட்டுக்குள் பிரவேசிப்பது உட்பட அனைத்துவிதமான தடைகளையும் அவர்களுக்கு எதிராக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். – என்றார்.

# டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய கூட்டணி ஸ்தாபிக்க யோசனை!

## திஸ்ஸ விதாரண கூறுகிறார்



முன்னாள் அமைச்சர் டலஸ் அழகபெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்களால் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கூட்டணியாக சர்வக்கட்சி அரசாங்கத்தில் ஒன்றிணைவது தொடர்பிலும் ஆலோசனைகளை முன்னெடுத்து வருவதாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நிகழ்கால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சளவில் மாத்திரமே ஜனநாயகவாதி, அதிகாரத்தில் இல்லாத போது ஜனநாயகம் பற்றி பெருமிதமாகக் கருத்துரைப்பவர், அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் ஜனநாயகத்துக்கு எதிராகவே அவர் செயற்படுவார் என்பதற்கு காலி முகத்திடல் போராட்டகாரர்கள் மீது மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல் சான்றாக உள்ளது.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைந்து சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்காவிடின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கமே தோற்றம் பெறும், அதனைத் தொடர்ந்து மக்களின் போராட்டமும் தீவிரமடையும்.

அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாட்டைத் தடுக்கும் வகையில் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் சர்வக்கட்சி அரசாங்கத்தில் ஒன்றிணைய வேண்டும். சர்வக்கட்சி அரசாங்கம் தோற்றம் பெறாவிடின் மீண்டும் பலவீனமான அரசாங்கமே தோற்றம் பெறும்.

முன்னாள் அமைச்சர் டலஸ் அழகபெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. கூட்டணியாக சர்வக்கட்சி அரசாங்கத்தில் ஒன்றிணைவது தொடர்பாக ஆலோசனைகள் முன்னெடுக்கப்படுகிறது. அரசாங்கம் முன்னெடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம். – என்றார்.

# கறுப்பு ஜூலையின் 39 ஆவது ஆண்டு நினைவு தினம்; கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ விசேட அறிக்கை



இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற கறுப்பு ஜூலை கொடூரமான வன்முறைகளில் தங்கள் உயிர்கள், உடைமைகளை இழந்த மற்றும் இடம் பெயர்ந்தவர்களை நினைவு கூருகிறோம் என கறுப்பு ஜூலை 39 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

நாடு முழுவதும் பல தசாப்தங்களாக நீடித்த அமைதியின்மை மற்றும் பதற்றங்களைத் தொடர்ந்து, கொழும்பில் தமிழர் படுகொலைகள் இடம்பெற்றன.

கறுப்பு ஜூலை என்று அழைக்கப்படும் இந்தக் கொடிய நிகழ்வுகள் 26 ஆண்டுகள் நீடித்த ஆயுத மோதலைத் தூண்டின. இது பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழக்கக் காரணமானது. தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் அழிக்கப்பட்டன.

லட்சக்கணக்கான மக்கள் நாட்டை விட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டனர்.

கறுப்பு ஜூலை வன்முறைகளைத் தொடர்ந்து வந்த மாதங்களில் இலங்கையில் நடந்த வன்முறைகளுக்கு பதிலளிக்க கனடா அரசாங்கம் ஒரு சிறப்பு நடவடிக்கையை செயற்படுத்தியது. இது 1,800 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கனடாவில் குடியேற உதவியது. கறுப்பு ஜூலை கொடூரங்களில் இருந்து தப்பிய பல தமிழ் கனேடிய மக்களை சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

அவர்களின் இழப்பு, இடப்பெயர்வு மற்றும் பின்னடைவு போன்ற வேதனையான அனுபவங்களால் நெகிழ்ந்து போனேன்.

கனடா இப்போது உலகின் மிகப்பெரிய புலம்பெயர்ந்த தமிழர்களின் புகலிடங்களில் ஒன்றாக உள்ளது. கனடாவை இன்று வலுவான, துடிப்பான மற்றும் பல்கலாசார நாடாக மாற்றுவதற்கு பெருமளவில் பங்களித்ததற்காக தமிழ் கனேடியர்களுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.

தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவக் கனடா தயாராக உள்ளது. இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கும், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் சட்டத்தின் ஆட்சியைப் பேணுவதற்கும் இலங்கை அரசாங்கத்தையும் இலங்கை நாடாளுமன்றத்தால் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் கனடா வலுவாக ஊக்குவிக்கிறது.

இந்த இக்கட்டான காலங்களில் போராட்டக்காரர்களின் உரிமைகள் மற்றும் பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கனடா மீண்டும் வலியுறுத்துகிறது.

கறுப்பு ஜூலை மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மோதலின் போது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள் அனைவருடனும் எங்கள் எண்ணங்கள் உள்ளன. அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட உறுதி பூண்டுள்ளோம். – என்றுள்ளது.

# கொவிட்தடுப்பூசிகளின் காலாவதி திகதி நீடிப்பு!

இந்த மாத இறுதியில் காலாவதியாகவிருந்த கொரோனா தடுப்பூசிகளின் காலாவதி திகதியை பைஸர் நிறுவனம் நீடித்துள்ளது.

மேற்படி நிறுவனம் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் தடுப்பூசிகளின் காலாவதி திகதி 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்பட்ட 4 வகைகளைச் சேர்ந்த 70 லட்சத்துக்கும் அதிகமான பைஸர் தடுப்பூசிகளின் காலாவதிகாலம் நீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது. அதன்பிரகாரம் 3 மாதங்களுக்கு காலாவதி திகதியை நீடித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுற்றறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

ஜூலை 31ஆம் திகதியுடன் காலாவதியாகவிருந்த இந்தத் தடுப்பு மருந்துகளின் காலாவதி திகதி ஒக்ரோபர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.



# ரணிலின் வெற்றியில் பங்கெடுத்த நாமல்!

கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளுடன் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட நிலையில், அன்று இரவு நாமல் ராஜபக்ஷவின் வீட்டில் மாபெரும் இராப்போசன விருந்து நடைபெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் இந்த விருந்துபசாரத்தில் மொட்டுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார் என்பதோடு அன்றைய இராப்போசன விருந்தில் 137 எம்.பிக்கள் கலந்து கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.07.2022இல் வெளியிடப்பெற்றது.